சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

ஓ.எஸ்.எண்.198/2018

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27 ம் நாள் பி.வா.சா.2 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரபாகர் | வயது | 42 |
| த/பெ | மாணிக்கராஜ் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | ஆலங்கொம்பு | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | வியாபாரம் |

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> :

என்னுடைய நிரூபண வாக்கு மூலம் பத்தி 3 ல் குறிப்பிட்டவாறு புல எண்.747, 748 பூமிகளுக்கு புல எண்.729/1 வாரி புறம்போக்கில் இருந்து வண்டி தடமானது வடக்காக சென்று வந்தது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றும் தற்போதும் அதே போல தான் உள்ளது என்றால் சரி தான். இந்த வண்டி தடத்தின் தொடர்ச்சி தான் புல எண்.749 ம் உள்ளது என்றால் சரி தான். புல எண்.747, 748 மற்றும் 749 ஆகியவற்றின் கிழ புறத்தில் தான் வண்டி தடம் செல்கிறது என்றால் சரி தான். புல எண்.749 ல் உள்ள வண்டி தடத்தை நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் மூல பத்திரங்களில் என்ன இருந்ததோ அதையே தான் நான் கிரையம் பெற்றுள்ளேன். புல எண்.749 ல் உள்ள வண்டி தடத்தை எனக்கு முன்பு இருந்தவர்கள் கிரைய பத்திரங்கள் அடிப்படையில் எவ்வாறு கிரையம் பெற்றார்களோ அதன் தொடர்ச்சியாகத் தான் நானும் கிரையம் பெற்றேன் என்றால் சரி தான். நான் கிரையம் பெற்ற பத்திரத்தில் உள்ள பூமிக்கு நான் மட்டுமே உரிமையாளர் என்றால்

சரி தான். புல எண்.749 க்கு தென் புறத்தில் தான் புல எண்.748 அமைந்துள்ளது என்றால் சரி தான். நான் புல எண்.748 ஐ நான் கிரையம் வாங்கிய போது வழித் தடத்தையும் சேர்த்து கிரையம் வாங்கினேன் என்றால் மூல பத்திரங்களில் என்ன இருந்ததோ அதை தான் நான் கிரையம் வாங்கினேன் தனியாக கிரையம் எதுவும் வாங்கவில்லை. புல எண்.748 க்கு தென் புறம் தான் புல எண்.747 உள்ளது என்றால் சரி தான். புல எண்.747 ல் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரி தான். புல எண்.747 க்கு தென் புறம் தான் பள்ள வாரி என்றால் சரி தான். என்னுடைய நிரூபண வாக்கு மூலம் பத்தி 3 ல் புல எண்.748 ஐ ஆரம்பத்தில் கிருஷ்ணப்பன் மற்றும் சுப்பையன் வாய் மொழியாக பிரித்து கொண்டதாக கூறியதற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிருஷ்ணப்பன் மற்றும் சுப்பையனுக்கு புல எண்.749 ல் எந்த உரிமையும் இல்லை என்றால் எனக்கு தெரியாது. புல எண்.747 லும் அவர்கள் இருவருக்கும் எந்த வித உரிமையும் இல்லை என்றால் எனக்கு தெரியாது. அவர்கள் இருவரும் செய்து கொண்ட பாகத்தில் புல எண்.747 ல் செல்லும் வண்டி தடத்தை பற்றி குறிப்பிட்டுள்ளதாக என்னுடைய நிரூபண வாக்கு மூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி தான். கிருஷ்ணப்பன் மற்றும் சுப்பையன் ஆகிய இருவருக்கும் உரிமை இல்லாத புல எண்.747 ல் உள்ள வண்டி தடம் குறித்து அவர்களுக்கு பாத்தியப்பட்ட புல எண்.748 ல் பூமிகளை பொறுத்து வாய் மொழியாக பாக பிரிவினை செய்யும் போது குறிப்பிடுவதற்கு சட்டப் படியான உரிமை இல்லை என்றால் சரி அல்ல. அந்த வாய் மொழி பாகத்தின் அடிப்படையில் 08.06.1970 அன்று மாதைய கவுடர் என்பவர் புல எண்.748 ல் உள்ள பூமிகளை கிரையம் பெற்றதாக

என்னுடைய நிரூபண வாக்கு மூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி தான். அந்த ஆவணத்திலும் அவர்களுக்கு உரிமை இல்லாத புல எண்.747 ல் உள்ள வண்டி தடத்தை பற்றி குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரி அல்ல. 19.08.1969 ல் ஏற்படுத்தப்பட்ட புல எண்.748 ல் உள்ள பூமிகளை பொறுத்து புல எண்.747 ல் உள்ள வண்டி தடம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என என்னுடைய நிரூபண வாக்கு மூலம் பத்தி 5 ல் குறிப்பிடப்பட்டு இருப்பது அந்த பத்திரத்தில் உள்ளவர்களுக்கு உரிமை இல்லாமல் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரி அல்ல. வண்டி தடம் 100 ஆண்டுகளுக்கு மேலாக பயன்பாட்டில் இருப்பதாக நான் கூறுவது கேள்வி பட்டதன் அடிப்படையில் தான் என்றால் சரி தான். வழக்கிற்காக வண்டி தடம் 100 ஆண்டுகளுக்கு மேலாக பயன்பாட்டில் இருப்பதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி அல்ல. புல எண்.747 மற்றும் 748 ல் உள்ள பூமிகளை பொறுத்து நில உரிமையாளர்களை பெயர்களை வருவாய் ஆவணங்கள் நில அளவை செய்து உட்பிரிவு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டு இருப்பது நில உரிமையாளர்களின் விண்ணப்பத்தின் பெயரில் தான் நடந்தது என்றால் சரி தான். அவ்வாறு நிலமானது புல எண்.747, 748 மற்றும் 749 ல் அந்த புலத்தில் உள்ள பூமிகளோடு சேர்த்தே வழித் தடம் பூமிகளும் இணைக்கப்பட்டு உரிமையாளர்களுக்கு உரிமை ஆவணம் வழங்கப்பட்டது என்றால் சரி தான். நிரூபண வாக்கு மூலம் பத்தி 8 ல் கூறியவாறு மாரண்ண கவுடர் என்பவரும் அவருடைய மகன்களும் சேர்ந்து வாதிக்கு 1.37 ஏக்கர் பூமியை 29.05.1991 அன்று கிரையம் செய்து கொடுத்தது வருவாய் ஆவணங்களில் அவர்களுக்கு உள்ள பூமியின் உரிமை அடிப்படையில் என்றால் சரி தான். அந்த பூமியில் 87 விஸ்தீரணத்தை வாதி 1 முதல் 4 பிரதிவாதிகளின் தகப்பனார் மாதைய

கவுடர் என்பவருக்கு வருவாய் ஆவணங்களில் அவர்களுக்கு உள்ள பூமியின் உரிமை அடிப்படையில் கிரையம் கொடுத்தார்கள் என்றால் சரி தான். புல எண்.747 ல் யார் யாருக்கு எவ்வளவு பூமி இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. புல எண்.747 ல் தற்போது 1 ம் பிரதிவாதிக்கு மட்டும் பூமி இருந்தது என்றால் சரி தான். புல எண்.747 ல் 1ம் பிரதிவாதி என்னென்ன ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டது அதில் என்னென்ன சரத்துக்கள் இருந்தன என்று எனக்கு தெரியாது என்றால் சரி தான்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டு கோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

| |
|---|
| மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது. |

ஒம்/- கா.கெங்காராஜ்,
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.